தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2022 மடங்கல் (ஆகத்து—91) விலை உருபா 1·50 (இதழ் எண்: 147)

தமிழினத்தைச் செத்தும் அழிக்கிறார் இராசீவ்!

இராசீவின் பெயரால், பார்ப்பனியமும் நடுவணரசும், தமிழினப் பகைவர்களும் தமிழீழப் போராளிகளை அடியோடு அழித்தொழிக்க முனைந்து நிற்கின்றனர்!

இங்குள்ள தமிழர்கள்தாம் அவர்களை ஆதரித்துக் கட்டிக்காக்க வேண்டும்.

இராசீவின் மறைவுக்குப் பின், அவரின் கொலையில் தொடர்புள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் சாக்கில், தமிழீழ விடுதலைப் போராளிகளும், அவர்களுக்கு ஆதரவாக இயங்கிய தமிழகத்தின் இனவுணர்வாளர்களும் பல வகையான கொடுமைகளுக்கும் உசாவல்களுக்கும் அழிவுகளுக்கும் ஆளாகி வரும் நிலை, இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் கடுமையாகப் பரவி வருகிறது.

தமிழ்ப் பற்றுடன், தமிழினப் பற்றுடன் இயங்கி வருவதே குற்றம் என்று கருதுகின்ற அளவில், தமிழகத்தில் உள்ள விடுதலைப் போராளிகளும் (புலிகளும்), தன்மான இனமான உணர்வுள்ள தமிழகத் தமிழர்களும், நடுவணரசுப் புலனாய்வுக் காவலர்களாலும், ஒற்றுத் துறையினராலும் தளைப்படுத்தப் படுவதும், மணிக்கணக்கில்—நாள் கணக்கில் உசாவப் படுவதும், சிறைப் படுத்தப் படுவதும், காவலர் காவலில் வைக்க படுவதும், அச்சுறுத்தப் படுவதும், அழிக்கப் படுவதும், தமிழகத்தின் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன.

கடந்த 1975—இல், இந்திராவால் கொணரப் பெற்ற நெருக்கடி நிலைக் காலத்தில், ‘தமிழ் வாழ்க’ என்று முழக்கமிட்டவர்களை யெல்லாம் பிடித்து

Scanned with CamScanner

'மிசா'ச் சிறையில் அடைத்தனர், அன்று தமிழக அரசின் சார்பில் இயங்கிய பார்ப்பனச் செயலர்கள். அந்த நிலையினும் கொடிய நிலை இன்று, நெருக்கடி நிலை அறிவிக்கப் பெறாமலேயே செயலுக்கு வந்துள்ளது.

இராசீவை வெடி வைத்துத் தகர்த்தவள், 'தனு' என்னும் வீரத் தமிழ்ப் பெண் ஒருத்திதான் என்றும், அவளும் அந்த வெடிப்புக்கே இரையாகிப் போனாள் என்றும், தெளிவாகத் தெரிந்திருந்தும், இராசீவின் குண்டு வெடிப்பு நிகழ்ச்சியை மேலும் மேலும் ஆழமாகவும் அகலமாகவும் தோண்டிப் பார்ப்பதாகக் கூறிக் கொண்டு, பல வாறான தமிழின அழிப்பை, இங்குள்ள அரசின் பார்ப்பனத் தலைமையும், அதன் கையாள்களான பார்ப்பன அதிகாரிகளும் செய்து வருகின்றனர்.

இவ் வாய்வை மேற் கொண்ட புலனாய்வுக் காவல் துறையினரோ கொஞ்சமும் ஈவும் இரக்கமும் இல்லாமல், 'பஞ்சம் சாவெடுத்த ஊருக்குள் புகுந்த காட்டு விலங்குகளைப் போல்', தமிழினத்தவர்களை அரற்றியும், மிரட்டியும், அடக்கியும், இராசீவின் சாவுக்கு வஞ்சம் தீர்க்கும் எண்ணத்துடன், தங்களுக்கு வேண்டாத, தாங்கள் விரும்பாத சிலரை அழித்தொழித்தும் வருகின்றனர்.

அரசும், புலனாய்வுத்துறையும், தமிழகக் காவலர்களும் இராசீவின் இறப்புக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் இக் கெடுபிடிகளைச் செய்வதாகத் தெரியவில்லை. தேர்தல் அறிவிக்கப் பெறுவதற்கு முன்பிருந்தே அ.தி.மு.க. வினரும், பேராயக் கட்சியினரும், ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க.வை ஆட்சியிலிருந்து அகற்றவும், அது மீண்டும் ஆட்சி நிலையில் தலை தூக்காதவாறு செய்யவும், விடுதலைப் புலிகளை அது ஊக்குவிப்பதாகவும், அதற்கு மறைமுகமாக ஆதரவு தருவதாகவும் பொய்யாக மக்களிடம் கருத்துப் பரப்புதல் செய்தார்கள். இடையில் இராசீவ் கொலையுண்டது, 'வெறும் வாயை மென்ற இவர்களுக்கு அவல் கிடைத்தது போல்' ஆகி விட்டது. அதனால் இராசீவ் கொலையுண்டது இவர்களுக்கு ஒரு புறம் வருத்தமென நடித்தாலும், உண்மையில் அவர் மறைவைத் தங்கள் வெற்றிக்குக் கிடைத்த ஓர் உத்தியாகவே, நல்வாய்ப்பாகவே கருதி உள்ளூர மகிழ்ச்சியே அடைந்திருக்கக் கூடும். அதன் எதிரொலி போலவும் தொடர் நிகழ்ச்சியாகவும்தான் இவர்களின் இன்றைய செயல்பாடுகள் அமைந்துள்ளன. இல்லெனில், இராசீவ் கொலையுண்ட சூடு தணியும் முன்னரே அதே வேகத்தில் இவர்கள் புலிகளை அழித்தொழிக்கவும், அது முடியவில்லையெனில், தமிழகத்தை விட்டு விரட்டவும் இவ்வளவு முனைப்புக் கொண்டிருக்க மாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் இன்று நேற்று இங்கு வந்தவர்களில்லை. 1983-இலிருந்தே தமிழகத்திலும் இந்தியப் பெருநகரங்கள் சிலவற்றிலும் வந்து தங்கியும், தங்களை வலுப்படுத்திக் கொண்டு வருகின்றனர். அதுவும் அக்கால கட்டத்தில் இந்திராவும் பின்னர் இராசீவுமே இவர்களை நன்றாக வளர்த்தெடுத்தனர். அவர்கள் போராட்டத்திற்கு உதவியாகப் பெரும் பொருளுதவியும், கருவிகளும் தந்து, அவர்கள் வளர்வதற்கும் முனைப்பாகச் சிங்கள அரசுடன் போராடுவதற்கும் முழுமுதல் காரணமாக இருந்திருக்கின்றனர். இதற்கு, அன்று ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. அரசும், அதைத் தலைமையேற்று நடத்திய ம.கோ.இராமச்சந்திரனும் விலக்கில்லை. அவரின் உதவியும் புலிகளுக்குக் கணிசமாகவே கிடைத்து வந்தது. இவ்விரு கட்சியினர் ஆதரவால், புலிகளும் பிற போராளிக் குழுக்களும் வலுப்பெற்று நாளடைவில் பெரு வளர்ச்சி பெற்ற பின்னரும், அக் குழுக்கள் தங்களுக்குள் கருத்தளவிலும் செயலளவிலும் முட்டி மோதிக் கொண்ட பிறகும்தான், அவர்கள் இவ் விந்திய மண்ணில் தொடர்ந்து இருந்து வந்தால், தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் எங்குத் தொல்லைகளும் சிக்கல்களும் வந்து விடுமோ என்று அஞ்சித்தான், அவர்களை ஒடுக்குகின்ற வகையில், செயவர்த்தனேவின் சிங்கள அரசுக்குச் சார்பாகவும் புலிகளுக்கும் போராளிகளுக்கும் எதிராகவும் செயல் பட்டனர். அந்நிலை வலுவடைந்துதான், செயவர்த்தனே—இராசீவ் ஒப்பந்தமும், அமைதிப்படை என்னும் பெயரால் இந்தியப் படைகள் இலங்கைக்குள் நுழைந்ததும் நடைபெற்றன. இவ்வரச தந்திர ஏற்பாட்டில், இலங்கை அரசை இந்தியா தன்வல்லதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரும் நோக்கமும் இணைந்தே இருந்தது.

ஆனால், இந்திய அரசு எதிர்ப்பார்த்த விளைவுகள் நடை பெறாததுடன், அவர்கள் விருப்பத்திற்கு மாறான நடவடிக்கைகளும் நடைபெற்றன. புலிகள் இந்திய அமைதிப் படையின் கொடுமையான—தாறுமாறான போக்கை முறியடித்து இலங்கை மண்ணிலிருந்து அதை விரட்டியடித்தனர். இந்த நிகழ்ச்சியால் இராசீவுக்கு முகத்தில் கரி பூசப்பட்டது. அத்துடன் அவர் ஆட்சியதிகாரமும் கை மாறியது. இவ் விளைவுகளுடன் ஏற்கனவே ஆட்சியில் அவர் செய்த ஊழல்களாலும் அவருக்குத் தலையிறக்கம் ஏற்பட்டது. தமிழகத்திலும் தில்லியிலும் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் இராசீவ் மீண்டும் ஆட்சியில் தலைதூக்க முடியாத நிலையும் ஏற்பட்டது. ஆனாலும் பார்ப்பனியமும் முதலாளியமும் சேர்ந்து, தில்லியில் வி.பி.சிங் ஆட்சியையும், அதையடுத்து இடையில் வந்த சந்திரசேகரரின் ஆட்சியையும் தகர்த்தெறிந்ததுடன், அச் சந்திரசேகரரைக் கொண்டே, தமிழகத்தின் தி.மு.க. ஆட்சியையும் அப்புறப்படுத்தின. இவ் வாட்சி அலங்கோலங்களுக்குப் பின்னர் வந்த இடைப் பொதுத் தேர்தலில், வட நாட்டுக் காசுமீரப் பார்ப்-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

இராசீவ் என்னும் கைதேர்ந்த அரசியல் நடிகனின் உள்ளும் புறமும்!

1980-இறுதியில் வானூர்தி ஓட்டியாக இருந்து தம் பணியை விடுத்து விட்டு அரசியலில் குதித்தார், இராசீவ்!

இந்திராவின் படுகொலைக்குப் பின், இராசீவின் அரியணை ஏற்றம் நடந்தது. தன் தாயாரின் படுகொலையையொட்டி, தில்லியில் மட்டும் 5000 சீக்கியர்கள் பேராயக் கட்சிக் குண்டர்களால் - வெறியர்களால் பதைக்கப் பதைக்க உயிரோடு எரிக்கப்பட்டனர்; வெட்டி வீழ்த்தப்பட்டனர். இது குறித்து முறை கேட்ட சீக்கிய மக்களிடம் இராசீவ் கூறினார், இவ்வாறு: 'ஒரு பெரிய ஆலமரம் விழும்போது நிலம் அதிர்வது தவிர்க்க முடியாதது.'

அவரின் 10 ஆண்டுக்கால அரசியல் வாழ்வு பலவகையான அதிகார ஆணவங்கள் நிறைந்தது. வல்லாளுமை அரசுச் சார்பான பொருளியல் கொள்கைகள், மக்களுக்கெதிரான புதிய புதிய அடக்குமுறைக் கொள்கைகள், ஒடுக்கு முறைக் கறுப்புச் சட்டங்கள், விலங்குத்தனமான கொடிய நடைமுறைகள், வகுப்பு வேற்றுமை அரசியல், மிகப்பெரிய ஊழல்கள், ஊதாரித்தனமான மகிழ்ச்சிப் பயணங்கள் - இவைதாம் இராசீவ் ஆட்சியின் அலங்கோலச் செயல்பாடுகள்! அவர் கொண்டு வந்த 59-ஆவது அரசியல் சட்டத் திருத்தமும், இலங்கைக்கு அமைதிப்படை என்னும் பெயரால் அவர் அனுப்பி வைத்த அதிகாரப் படைத்துறைக் குண்டர் கும்பலின் வெறித் தாக்குதலும் அவர் அரசியல் அவலங்களின் கொடுமுடிச் செயற்பாடுகள்!

உண்மையில் சொந்த நாட்டு மக்களை ஒடுக்கி அவர்களின் சொத்துகளைச் சூறையாடிக் களிப்புவகை (உல்லாச) வாழ்க்கை வாழ்ந்த செருமனியின் அடால்ப் இட்லர், இத்தாலியின் முசோலினி, ஐத்தியின் டுவாலியர், ஈரானின் சா, பிலிப்பைன்சின் மார்கோசு - ஆகியோர் போல அடக்குமுறைக் கொடியவரின் வழியில் எள்ளளவும் பிசகாது நடைபோட்டார், இராசீவ்.

இந்திராவின் ஊழல் நாட்டு மக்களுக்குத் தெரியவந்தபோது, அவர், 'ஊழல் என்பது இங்குமட்டுமன்று; உலகம் முழுவதும் பரவலாக நடக்கும் ஒரு நடைமுறைதான்! அதை ஒழிக்க முடியாது' - என்று வெளிப்படையாகக் கூறினார்.

அதுபோல, இராசீவ் அரசியலுக்கு வந்தவுடன் தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பதற்கிணங்க அந்துலேவின் மிகப் பெரிய பைஞ்சுதை (சிமெண்ட்) பேர ஊழலைப் பற்றி, 'அது, உண்மையாகப் பார்க்கப் போனால் ஊழலே இல்லை' என்று, ஊழலுக்குப் புதுப் பொருள் கூறினார்.

இராசீவ் மறைந்ததற்காக உண்மையில் வருந்தியவர்கள் பெரும் பெரும் தரகு முதலாளிகளும், இந்தியப் பெரும் முதலாளிகளுந்தாம்! அவர்கள் கண்ணீர் மல்க, 'இராசீவ் ஓர் இந்திய ரீகன்' என்றுதான் நீலிக் கண்ணீர் வடித்தனர். அவருடைய இறப்பு உண்மையிலேயே இந்தியக் கொள்ளை முதலாளிகளுக்குப் பெரிய இழப்புதான்! ஆனால் பொது மக்கள் ஏன் வருந்துகிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. அரசியலில் புரியாத புதிர்களும் உண்டு என்பதற்கான எடுத்துக்காட்டே அது!

அவருடைய இழப்பு இந்தியாவின் கொள்ளை முதலாளிகளுக்கும் வெளிநாட்டுத் தரகு முதலாளிகளுக்கும் உண்மையிலேயே பேரிழப்புத்தான் என்பதைக் கீழ்க்காணும் அவரின் ஆட்சி நடைமுறைகள் மெய்ப்பித்துக் காட்டும்.

அவர் பதவியில் இருந்தபொழுது,

1. வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பல துறைகளுக்கும் திறந்து விட்டுள்ளோம் என்று அறிவிப்புச் செய்தார்.

2. செய்தித் தொடர்புத் துறை, போக்குவரத்துத் துறை, விசைத்துறை வேளாண்மைத் துறை போன்ற கொள்ளை வருமானத் துறைகள் அனைத்தையும் தரகு முதலாளிகள் கைப்பற்ற வாய்ப்புகளைத் தாராளமாக்கினார்.

3. அனைத்துக் கட்டுப் பாட்டுச் சட்டங்களையும் (MRTP) திருத்திப் பெரு முதலாளிகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள முதலீட்டு வரம்பான 20 கோடியை 100 கோடியாக உயர்த்தினார்.

4. அதே சமயம் பொதுத்துறை முதலீட்டை 65 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காடாகக் குறைத்தார்.

Scanned with CamScanner

5. அதிக அளவு வருமான வரி விழுக்காட்டை 62%இலிருந்து 50% ஆகக் குறைத்தார்.

6. பெரு முதலாளிகளின் ஊதியத்தின் மேல் உள்ள வரியை 10 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைத்தார். (இதனுல் அரசுக்கு அவர்களின் ஊதியத்தில் வரும் வருமானம் பாதியாகக் குறைந்தது. இதனுல், ஆண்டுக்கு 100 கோடி ஊதியம் வரும் முதலாளி ஒருவர் அரசுக்கு 10 கோடி வரி தருவது 5 கோடியாகக் குறைந்தது.)

7. புதிய முன்னேறிய ஆடம்பர சிற்றியங்கி முதல், பற்பல மின்னணுக் கருவிகள் வரை விற்பனைக்கான இறக்குமதி செய்து கொள்ளத் தாராளமாக முதலாளிகளுக்கு முழு உரிமை வழங்கினுர் இராசீவ். இதனுல் எழுச்சியுற்ற மேல்நாட்டு ஆசை வேட்கையுடன் புதிய ஒரு மேட்டுக்குடி இனமே உருவானது.

8 பட்டணங்களில் உள்ள பணக்காரர்கள் வளர்வதற்கு மிகு வாய்ப்பளித்த இராசீவ், சிற்றூர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான பொருளீட்டைப் பெருமளவில் குறைத்தார். ஏழை மக்கள் வீடு கட்டுவதற்கான பொருள் ஒதுக்கீட்டை 84 கோடியிலிருந்து 39 கோடியாகவும், தன்வேலை (சுயவேலை) வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த உருபா.149 கோடியை 65 கோடியாக்வும் குறைத்தார்.

9. ஏழை மக்கள் படிப்பதற்குரிய வாய்ப்புகள் குறையுமாறும், பணக்காரர்களும் மேட்டுக்குடி மக்களுமே படிக்கின்ற வாய்ப்புகள் மிகுமாறும் 'புதியக் கல்விக்கொள்கை'த் திட்டத்தைக் கொண்டு வந்தார், இராசீவ்.

10. அதைப் போலவே, உயிர் காக்கும் மருந்துகளை உருவாக்கும் பொறுப்பை வெளிநாட்டு மருந்துக் குழுமங்களுக்குக் கொடுத்து நச்சு மருந்துகளை உருவாக்கும் இசைவை உள்நாட்டு மருந்துக் குழுமங்களுக்குக் கொடுக்கும் 'புதிய மருந்துக் கொள்கை'யை அறிமுகப்படுத்தினுர்.

11. அதேபோல், கைத்தறித் துணி நெசவைக் குறைத்து, ஆடம்பரத் துணி வகைகளை உருவாக்கம் செய்யப் 'புதிய சவளிக் கொள்கை' அவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

12. அதைப் போலவே, 'புதிய தொழிற் கொள்கை' என்னும் முறையில், பெரும் முதலாளிகள் கதவடைப்புச் செய்யவும் வேலைத் தவிர்ப்புச் (லே-ஆப்) செய்யவும் முழு உரிமையை அளித்து, தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையைக் குமுகாயக் குற்றமாக்கிச் சட்டம் கொணர்ந்தார்.

13. பஞ்சாப், அசாம், மிசோரம் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வாகத் தாம் செய்து கொண்ட ஒப்பந்தங்களை முதலாளிகளுடைய எதிர்ப்புக்கும் பார்ப்பனச் செய்தித்தாள்களின் ஏளனத்துக்கும் அஞ்சிச் செயல்படுத்தாமலேயே கிடப்பில் போட்டார், இராசீவ்.

14. பஞ்சாப் தொடர்பாக லோங்கோவாலுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் நடந்த ஐந்து நாள்களுக்குள்ளாகவே லோங்கோவால் சீக்கிய இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

15. அதே போல், ஆழந்தெரியாமல் காலைவிட்டது போல் இராசீவ்-செயவர்த்தன அமைதிப்படை ஒப்பந்தமும், ஆயிரக்கணக்கான தமிழர்களைப் பலி கொண்டதுடன், இவர் அனுப்பி வைத்த இந்திய சூரப்புலிப் படைகள், உண்மையான தமிழீழப் புலிகளின் வேகத்துக்கும் தாக்கத்துக்கும் அஞ்சிப் பிடரியில் கால்பட இந்தியாவுக்குத் திரும்பியதும், இவருக்கு ஏற்பட்ட பெருத்த அரசியல் தோல்வியும் அவமானமுமாகும்.

16. இதுவரை இந்திய அரசியல் ஆடுகளத்தில் புழக்கத்தில்—இலக்கங்களாக இருந்த கையூட்டுத் தொகையைக் கோடிக்கணக்கில் கொண்டு வந்த பெருமை இராசீவுக்கும் அவர் ஆட்சி ஆதிகாரக் கூட்டாளிகளுக்குமே உண்டு.

17. பகற்கொள்ளைக் கூட்டமாக மாறி நாட்டையே ஒட்டு மொத்தமாகச் சூறையாடினர் இராசீவும் அவரின் அரசியல் அதிகாரப் பங்காளிகளும், இப்படியுமா, இந்தத் துறையிலுமா—என்று மக்கள் அதிர்ச்சியுற்றுக் கடுஞ்சினம் கொள்ளும் அளவிற்கு சணல் பை வாங்குவதில் கூட கோடிக்கணக்கில் சுருட்டினர்.

18. இராசீவ் மட்டும் தம் தலைமைப் பதவி காரணமாக இத்தகைய கையூட்டு வணிக ஊதியங்களை அதிகமாகவே பங்கு போட்டுக் கொண்டார் என்பது எல்லா நிலையிலும் வெட்ட வெளிச்சமாக ஊரறிந்த, உலகறிந்த கமுக்கம் (இரகசியம்) ஆக இருந்தது.

அவர் தகரி (பீரங்கி) பேரத்தின் மூலம் 64 கோடியும். நீர் மூழ்கி பேரத்தின் வழியாக 30 கோடி உருபாவும், திருகிறக்கை (Helicoptor) பேரத்தின் வழி 12 கோடியும், பெப்சிகோலா ஊழலில் 5 கோடியும் தனியாகச் சுருட்டிக் கொண்டார்.

Scanned with CamScanner

இந்தத் தொகைகள் மட்டுமல்லாமல், இன்னும் வெளிவந்தும் வராமலும் இருக்கின்ற பல்வேறு ஊழல்கள் வழியாக ஏறத்தாழ 650 கோடி உருபா மதிப்புள்ள சொத்துகளை வெளிநாடுகளில் சேமித்து வைத்து அவற்றுக்கு மாற்றுப் பெயர்வழியாக (பினாமியாக) அவரின் குடும்ப நண்பர் அமிதாப்பச்சனையும் அமர்த்தியுள்ளார். இதுபோலவே இராசீவைச் சுற்றியிருந்த ஆட்சியதிகாரக் கும்பலும் அவரவர் வாய்ப்புக்கும் ஆற்றலுக்கும் அதிகார வரம்புக்கும் உட்பட்ட வகையில், பல்வேறு பேரங்களில் பலவாறான தொகைகளை விழுங்கி ஏப்பமிட்டுக் கொள்ள உதவியுள்ளார்.

19. எண்ணெய் பேர ஊழலில் இலலித் சூரி என்பவர் ஆறரைக் கோடி உருபாவையும், முன்னாள் பாராளுமன்றத் தலைவர் பலராம் சாக்கர், மாட்டுத் தீவன இயந்திர ஊழலில் மூன்றரைக் கோடி உருபாவையும்,

—அர்சுன்சிங் என்பவர் பரிசுச் சீட்டு ஊழலில் ஒன்பதரைக் கோடி உருபாவையும்,

—நில பேர ஊழலில், சரத் பவார் 1500 கோடி உருபாவையும்,

—பிரபு என்பவர், கோணிப்பை ஊழலில் 5 கோடி உருபாவையும்,

—பளிங்குக்கல் ஊழலில், சத்தீசு சர்மா என்பவர் 3 கோடிகளையும்,

—துமுக்கி (துப்பாக்கி) பேர ஊழலில், அருண் நேருவும், கமல் நாத்தும் பொய்க் கணக்குகள் காட்டிப் பலகோடி உருபாவையும், சுருட்டுவதற்கு இராசீவ் ஆதரவாக இருந்தார். இதுவரை இக்குற்றங்களுக்காக அவர்களில் ஒருவரும் தண்டிக்கப்படவே இல்லை.

20. இவ்வூழல்கள் வெளிப்பட்டபோதெல்லாம் இராசீவ் இக் குற்றங்களை மூடி மறைப்பதற்கு அச்சநிலைக் கருத்து (பயங்கரவாத)த் தடைச்சட்டம், அச்சநிலைக் கருத்து (பயங்கரவாத)ச் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், தனி வழக்குமன்றச் சட்டம், தொழில் சிக்கல் வரைவு. தேசப் பாதுகாப்புச்சட்டம் என வரிசை வரிசையாகக் கருப்புச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

21) இராசீவ் பதவிக்கு (பட்டத்திற்கு) வந்தவுடனேயே அவர் தாயார் "1975-இல் நெருக்கடி நிலை கொண்டு வந்தது சரிதான்; தேவைப்பட்டால் நெருக்கடி நிலையை மீண்டும் கொண்டு வரத் தயங்க மாட்டேன் என்று ஆரவாரமாகவும் செருக்கோடும் தெரிவித்தார்.

22. அவர் ஆட்சியின் இறுதி நாள்களில் அவர் செய்கின்ற ஊழல்களும் கொள்ளையடிப்புக்களும் நாள்தோறும் செய்தித்தாள்களில் அம்பலமாவதைக் கண்டு கொதித்துச் செய்தியிதழ்கள் மீது ஓர் அவதூறு சட்ட வரைவைக் கொணர்ந்தார்.

23. தமது நெருங்கிய நண்பரும் கூட்டாளியுமான ஏமாற்றுப் பேர்வழியாகிய அம்பானியின் தில்லு முல்லுகளை "இந்தியன் எக்சுபிரசு' ஆங்கில நாளிதழ் அம்பலப்படுத்தியதால் அதன் இதழ் அலுவலகத்தில் காவல் துறை ஆய்வு நடத்தச் செய்தார். தம் ஒற்றுத் துறைக் காவலர்களை ஏவி அதன் ஆசிரியர் குருமூர்த்தியைத் தளை (கைது) செய்தார்.

24. இராசீவின் ஊழல் நடவடிக்கைகளால் மனம் நொந்து அவரின் குற்றங்களுக்கு ஒத்துப் போகாமலும் மாறாகவும் நடந்த ஏ. பி. வெங்கடேசுவரன் போன்ற அதிகாரிகளைப் பதவிகளிலிருந்து வெளியேற்றினார் அவரின் போக்கில் வெறுப்படைந்த குடியரசுத் தலைவர் கியானி செயில்சிங்கையே புறக்கணிப்புச் செய்து புறந்தள்ளினார்.

25. அவரின் அரசியல் நடவடிக்கைகள் இதுவரை எவரும் செய்யமுடியாத அருவருப்பும், அழிம்புகளும் நிறைந்தவை. திட்டககுழுவை(கமிஷனை)க் கோமாளிகள் குழு என்று அரசின் தலைமைப் பொறுப்பிலுள்ள அவரே இழித்துப் பேசினார்.

—தம் கட்சியிலுள்ள மூத்த தலைவர்களின் அறிவுரைகளையும் கேட்காமல், அவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஆட்டு மந்தைகளைப் போல் நடத்தினார்.

— தம் அமைச்சரவையைத் தம் விருப்பத்திற்கு ஏற்ப 30 தடவைக்கும் மேல் மாற்றி அமைத்தார். தமக்குப் பிடிக்காத சிலரை வெளியேற்றினார்; தமக்குகந்தபடி உள்ளவர்களைப் புதிதாகப் புகுத்தினர்

—தமக்கு அடிபணிய மறுத்த, தம் கட்சி ஆள்கின்ற மாநில முதலவர்களையும் மாற்றியமைத்தார். இதற்காக இந்து–முசுலீம கலவரங்களைத் தூண்டிவிட்டுக், குருதிக களரி ஆக்கினர்

—இனி எல்லாவற்றையும் விட, அனைத்திற்கும் உச்ச கட்டமான பாபர் வழிபாட்டிடம் (மசூதி)-இராமர் கோயில் சிக்கலுக்கு மூலமுதல்வராக இராசீவ் இருந்தார். அவர் தம் பாபர் வழிபாட்டிடத்தை 1986-இல் இந்துக்களுக்கு மட்டும் திறந்துவிட்டு இந்தியாவே குருதிக் களமாக மாற அடிப்படைக் காரணமாக இருந்தார்.

26 தேசிய இனங்களின் போராட்டங்களை நசுக்க 5 மாநிலங்களில் படைத்துறை

Scanned with CamScanner

(இராணுவ) ஆட்சியை நடைமுறைப்படுத்தினார்.

27. இந்திய அரசியல் சட்டத்தில் மக்களின் உயிர் வாழ்க்கைக்குத் தரும் உரிமையை 59-ஆவது சட்டத் திருத்தம் மூலம் பறித்துவிட்டு, இறுதிக் கால ஆட்சியில் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையைக் கடைப்பிடித்தார்.

28. இந்தியாவில் பிறந்தது தவிர, முழுவதும் இராசீவ் தம்மை மேல்நாட்டு நாகரீகத்திலேயே வளர்த்துக்கொண்டு மேட்டுக்குடி மகனாகவே வாழ்ந்து வந்தார். அவருடைய அமைச்சரவையில் இருந்த 57 பேர்களில், அவரைப் போலவே அரச வாழ்க்கை வாழ்ந்த அவருடன் படித்த நண்பர்கள் 17 பேர். அவர்கள் அனைவரும், மேனாடுகளிலேயே சுற்றித் திரிந்த ஊதாரிகள், பெரும் முதலாளிகள்; பன்னாட்டு நிறுவனங்களிலும் அதிகாரப் பொறுப்பில் இருந்தவர்கள். அவர்களில் முகாமையான பாப்புல் செயகர், ரோமி சோப்ரா, அருண் நேரு, கோபி கிருட்டிண அரோரோ, பொட்டேடர், அர்சுன் சிங், இராசீவ் சேத்தி, அமிதாபச்சன், அம்பாணி முதலியோரே இராசீவின் கூட்டாளிகள்! இவர்களுக்கு அரசியல் என்பதே வணிகம் என்றும் கொள்ளையடிக்கும் வாய்ப்பு என்றுமே தெரியும். இவர்களின் துணையோடு தான் இராசீவ் அரசியல் உலா வந்தார்.

29. இவர் 5 ஆண்டுகளில் 52 முறை வெளிநாடுகளுக்கு மகிழ்வுச் செலவு (உல்லாசப் பயணம்) சென்றார். இப்படி இவர் சென்ற ஒவ்வொரு முறையும் 10 கோடிக்கு மேல் மொத்தமாக 600 கோடி உருபாவை, மக்கள் வரிப்பணத்தை- இவர் சூறையிட்டார். இம் மகிழ்வுச் செலவுகளிலெல்லாம் உறவினர்களும் இவருடன் சென்று கும்மாளமிட்டனர். இக் கூத்தடிப்புகளிலெல்லாம் புலால் உணவும், உயர்ந்த வகை மீன்களின் சினைகளெல்லாம் வறுத்து இவருக்கு உணவாகப் படைக்கப் பட்டன. இலட்சத் தீவுக்கு இவர் சென்றிருந்த பொழுது, கேரளாவிலிருந்து தனிச்சிறப்பாக இவருக்கு மிதவை (பாயசம்) செய்து தனி வானூர்தி வழி அனுப்பப்பட்டது. இவர் இவ்வகையில் வீணழித்த அரசுப் பணத்தை, உலகிலேயே கொழுத்த பணக்காரரான புருனி சுல்தானைத் தவிர வேறு யாரும் செலவழித்ததில்லை என்று ஓர் அமெரிக்க இதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

30. இவ்வாறான அரசியல் தில்லு முல்லுகளையும், ஆரவார ஆடம்பரத்தனங்களையும் 'அப்னா உத்சவ்' 40-ஆம் ஆண்டுக் குடியுரிமை (சுதந்திர) ஓட்டம், கலைப்பண்பாட்டு விழாக்கள் போன்ற தேசிய நிகழ்ச்சிகளை நடத்தி, விளம்பரம் பெற்றும் மக்களைத் திசை திருப்பியும் அடியோடு மறைத்தது இராசீவ் கும்பல்.

31. இத்தகைய அரசியல் அரம்பத்தனங்களை (Political Rowdyism) எல்லாம் நேரடியாகவும் மறைமுகமாகவும் கடைப்பிடித்துத் தம் அரசாட்சியை எல்லா வகையிலும் வலுப்படுத்திக் கொள்ள அரும்பாடுபட்டார் இராசீவ். தெற்கு ஆசியாவில் தம் மேலாளுமையையும் சாய்காலையும் மேம்படுத்திக் கொள்ள தம் அன்னை இந்திராவை விட மிகவும் சூழ்ச்சியாகவும் வெறித்தனமாகவும் செயல்பட்டார்.

இலங்கையரசைத் தம் கட்டளைக்குக் கீழ்க்கொண்டுவரும் கரவான எண்ணத்துடன் அங்கிருந்த விடுதலைப் போராளிகளை இந்தியாவிற்குக்கொணர்ந்து, அவர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்து, இலங்கையரசின் மேல் ஏவி விட்டார். பிறகு போராளிகள்வலுப் பெறுவது இந்தியாவுக்கும் கேடு என்று உணர்ந்து கொண்ட இராசீவ். அவர்களைத் தம் ஒற்றுத்துறைகளான 'ரா' (RAW), CBI ஆகியவற்றின் மூலம் பிளவுபடுத்தி, ஒன்றுக்கொன்று முரண்படுமாறு செய்தார். பின் இலங்கைக்குள் தம் படைகளை அத்துமீறி அனுப்பி உணவுப் பொட்டலங்களைப் போடும் சாக்கில் இலங்கை அரசை அடி பணிய வைத்தார். பின்னர் அதனுடன் இச்சகம் பேசி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றி இந்தியப்படையை அமைதிப்படை (IPKF) என்னும் பெயரில் இலங்கைக்கு அனுப்பினார். விடுதலைப் புலிகளைச் (சிறு) பொடியன்கள் என்றும், 'அவர்களை இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் அடக்கி அடிமைப்படுத்துவேன் என்றும் இழிவுரை, இகழ்ச்சியுரை, எள்ளலுரை கூறினார்.

அங்கு சென்ற இந்தியப் படையின் 'சாத்தானி'யப் பிரிவுகள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களை வேட்டையாடியும், தமிழ்ப்பெண்களை பாலியல் கொடுமைகள், அரக்கத்தனங்கள், வெறியாட்டங்கள்' ஆடியும், அழிம்பு செய்யக் காரணமாயிருந்தார். இறுதியில் பற்பல கோடி உருபாக்களையும், பற்பல இந்திய வீரர்களையும் பறி கொடுத்த பின்னர் இந்தியக் கூலிப்படை, இலங்கைத் தமிழ் மற்றும் சிங்கள மக்களின் கடும் எதிர்ப்பினாலும், விடுதலைப் புலிகளின் வீரம் மிக்க கருவிப் போரினாலும் பிடரியில் கால்பட பின்னோக்கி இந்தியாவுக்கு வரலாயிற்று. இந்த வகையில் இலங்கை மக்களுக்கும் அங்குள்ள தமிழர்களுக்கும் இராசீவ் கொடும் பகைவரானார்.

32. தொடக்கத்திலிருந்தே இராசீவ் மக்களை விட்டு விலகியே நின்றார். மக்களும் அவரை விட்டு விலகியே நிற்கும்படி செய்யப்

Scanned with CamScanner

பட்டனர். அவர் எப்பொழுதும் குண்டு தொளைக்காத சட்டை, குண்டு தொளைக்காத இயங்கி, குண்டு தொளைக்காத மேடை கவசக் கண்ணாடிக் கூண்டு என்பவற்றுக்குள் தான் ஊடாடி வந்தார்.

—அவரைச் சுற்றி மூன்று பாதுகாப்பு வளையங்கள் அமைக்கப்பட்டன. முதல் வளையத்துள் கறுப்புப்பூனைகள் என்று கூறப்பெறும் (S. P. G.) அதிரடிப் படையினரும், இரண்டாவது வளையத்திற்குள் 'ரா' உளவுத்துறைப் படைகளும், மூன்றாவது வளையத்திற்குள் CRPF என்னும் தில்லிக் காவல்துறையினரும், இராசீவ் போகும் இடங்கள் எல்லாம் அவரைச் சுற்றி வளைய வந்தனர்.

—இவை தவிர, தில்லியில் இராசீவ் குடியிருந்த மாளிகை உள்ள 'ரேசுகோர்சு' (குதிரைப் பந்தையத் திடல்) பகுதியில் மக்கள் நடமாட அனுமதி கிடையாது.

—அவரது மாளிகையில் 25 கோடி உருபா மதிப்புள்ள பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன.

—இவரும் இவர் குடும்பத்தினரும் உண்ணும் உணவில் நஞ்சு வைக்கப்படலாம் என்று கருதியிருந்ததால், அவர்கள் உண்ணுவதற்கு முன் அவர்கள் உணவைச் சாப்பிட்டு ஆய்வு செய்வதற்காகவே 32 பேர் கொண்ட குழு ஒன்று அவர்கள் கூடவே இயங்கியது. பழைய முடியாட்சி மன்னர் தலைமுறையில் இவ்வாய்வுக்கென பூனைகள் பயன்படுத்தப் பட்டன. ஆனால் இக் குடியாட்சி மன்னர் வகையிலோ அவ்வாய்வுக்கென மக்களே பயன்படுத்தப்பட்டனர். இராசீவின் வீட்டார் பயன்படுத்திய உப்பு முதல் காய்கறி, நெய் முதலிய அனைத்துப் பண்டங்களும் அன்றாடம் வேதியல் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னரே சமைக்கப்பட்டன. இவ்வாறு சமைக்கப் பட்ட உணவு எதுவும் இரண்டுமணி நேரத்திற்குள் பயன்படுத்தப்படாவிட்டால் அது சாய்க் கடையில் கொட்டப்பட்டன

33 இராசீவின் பாதுகாப்புக்காக மக்கள் வரிப்பணம் அளவுக்கு மீறி வீணடிக்கப்பட்டது. இவருக்கும் இவர் குடும்பத்திற்கும் என தனிப்பட்ட முறையில் செலவிடப்பெற்ற அரசுப் பாதுகாப்புச் செலவுகள் போக இவர் வெளியில் செல்லும்போது இவர் பரிவாரங்களுக்கு என ஆகும் செலவு வேறு கடுமையாக இருந்தது.

—அவர் வெளியில் சென்றால், குண்டு தொளைக்காத 3 இயங்கிகள் ஒரே மாதிரியாகச் செல்லும். இதில் ஒவ்வொரு போக்கிலும் எந்த வண்டியில் இவர் செல்கிறார் என்பது பாதுகாப்புப் படையினருக்குத் தவிர, வேறு எவருக்கும் தெரியாத வகையில் மாறி மாறிச் செல்வார். இம் மூன்று வண்டிகளுக்கும் முன்னும் பின்னுமாகப் பற்பல வண்டிகள் செல்லும். இம்முறை பாசிசத் தலைவர்கள் இட்லரும், முசோலினியும் கடைப் பிடித்தது.

—இதுபோலவே வானூர்தி வழியாகச் சென்றாலும் 6 திருகு விசிறு ஊர்திகள் (எலிகாப்டர்கள்) முன்னும் பின்னும் வட்ட வளையமாகப் பறந்து செல்லும். இவர் வானூர்தியில் செல்லும்பொழுது இவர் வழியில் வேறு எந்த ஊர்தியும் முன்னாகவோ, பின்னாகவோ இடையிலிருந்து வரவோ செல்லவோ புறப்படவோ கூடாது - என ஏற்பாடு செய்யப் பெறும். மொத்தத்தில் இராசீவுக் கென்று மிகவும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற 2000 பாதுகாவலர்கள் அமர்த்தப் பெற்றிருந்தனர். இவ்வகையில் மட்டும் ஆண்டுக்கு 300 கோடி உருபா, மாதத்திற்குத் தோராயமாக 30 கோடி உருபா செலவழிக்கப்பட்டது. (இந்தியப் பாதுகாப்புச் செலவே ஆண்டுக்கு ஏறத்தாழ 16,000 கோடி. அஃதின்றி இவருக்கு மட்டும் தனிச் செலவு அதில் ஐம்பதில் ஒரு பங்கு என்றால் எப்படி?)

34. காசுமீர் பார்ப்பனரான இராசீவின் சாம்பல் ('அஸ்தி') என்று சமசுக்கிருதத்தில் சொல்வதாலேயே அது தூய்மையானது, புனிமானது என்றாகி விடாது. அறிவியல்படி ஒரு நாயின் சாம்பலும் இராசீவின் சாம்பலும் ஒன்றுதான்.) இந்துமதச் சடங்குகளின்படி பல பேராறுகளிலும் கடற்பகுதிகளிலும் கரைக்கப் பட்டது. ஆனால் கங்கையில் கரைத்தாலும் சரி, கன்னியாகுமரியில் கரைத்தாலும் சரி, இமயமலையின்மேல் தெளித்தாலும் சரி, இராசீவ் என்னும் ஒரு மாந்தன், அவர் வாழ்ந்தபொழுது ஓர் ஊழல் பேர்வழிதான், ஊதாரிதான், ஒரு கொடிய அரசுத் தலைவன் தான்! இதை யாருமே மறுக்க முடியாது. சாம்பலுக்கு வரலாறில்லை. ஆனால் சாம்பலாவதற்கு முன் இருந்த உடம்புக்குத்தான் வரலாறெல்லாம் என்பது உண்மையானால் இராசீவ் என்பவரின் வரலாறு கறைபட்ட, ஒரு கயமைத்தனமான வரலாறே!

இதைத் தவிர இராசீவின் வாழ்க்கையை ஒரு புனிதமானது, பெருமைமிக்கது, இந்தியாவுக்கே பெருமை தருவது என்பதுபோல் பிதற்றிப் பேசுபவர்கள், ஒன்றால் பச்சைப் பார்ப்பனர்களாக இருத்தல் வேண்டும்; அன்றால் பார்ப்பனர் அடிவருடிகளாக இருத்தல் வேண்டும்; இல்லையென்றால் அரசியலறிவே அற்ற பேதையாக இருத்தல் வேண்டும்! மற்றபடி அவர் குண்டு வெடித்து இறந்ததை வைத்து, அவருக்குப் பெருமை வந்து விடாது. சாணியிலே இடி விழுந்தால் சாணி தங்கமாகி விடுமா, என்ன?

(—அடிப்படை: 'கேடயம்' 'புதிய சனநாயகம்' முதலியவற்றின் சூன், சூலை இதழ்கள்.)

Scanned with CamScanner

தேர்தல் செலவுகள்!

தேர்தல் வந்து விட்டால் பெருமுதலாளிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தைக் கோடி கோடியாய் வாரியிறைத்துத்தமக்கு ஆதரவாக உள்ள கட்சியை அல்லது வேட்பாளரை ஏலத்தில் எடுக்கிறார்கள். அனைவருக்கும் ஒப்போலை (வாக்கு) உரிமை என்னும் மூடுதிரையின் பின்னே நடக்கும் இந்த ஏமாற்று வேலை ஒவ்வொரு தேர்தலிலும் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் ஆணைக்குழு(கமிஷன்) வரையறுத்துள்ள வரம்பை மீறாமல் தேர்தல் செலவுகளைச் செய்வதாக, எல்லா வேட்பாளர்களும் வேட்பு வேண்டுகை பதிவு செய்யும்பொழுது உறுதியளிக்கின்றனர். ஆனால் எந்த ஒரு பெரிய கட்சியும் அதை மதித்து நடந்ததாக வரலாறில்லை.

ஒரு மிகப் பெரிய தொகுதியில் பாராளுமன்றத்திற்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் அதிக அளவில் உரு. 1,50,000-தான், தமது தேர்தல் கருத்துப் பரப்புதலுக்காகச் செலவிட வேண்டுமென்று தேர்தல் ஆணைக்குழு வரையறுத்துள்ளது ஆனால் அதைவிட 15, 20-மடங்கு அதிகமாகவே ஒவ்வொரு வேட்பாளரும் செலவு செய்கின்றார். தேர்தல் ஆணைக்குழு வரையறுத்துள்ள வரம்பை மீறியதாக மெய்ப்பிக்கப்பட்டால் அவர்களின் தேர்தல் வெற்றி செல்லாது. இதை அறிந்திருந்தபோதிலும், வரம்புக்குட்பட்டுச்செலவு செய்ததாகக் கூசாமல் அவர்கள் பொய்க் கணக்குக் காட்டி ஏய்க்கின்றனர். ஏனெனில் அவர்கள் வாரியிறைக்கும் அத்தனையும் கருப்புப் பணம்.

இன்றைய தோராய மதிப்பீட்டின்படி தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும் சரிக்குச்சரி உரு. 500 கோடி வரை தேர்தலில் செலவிடுகின்றன. மாநிலக் கட்சிகள் ஒவ்வொன்றும் சரிக்குச்சரி ஏறத்தாழ 50-60 கோடி உருபா வரை செலவிடுகின்றன.

இப்படிக் கோடிக்கணக்கில் வாரியிறைக்கப் படும் பணம், தீபாவளிப் பட்டாசு கொளுத்திக் கரியாக்குவதைப் போல, விளம்பரம், சுவரொட்டி, கொடி, ஒளியிழைப் படம், திரைப் படம், போக்குவரத்துச் செலவு, குண்டர்களுக்குத் தீனி என்று அழிவு வேலைக்காகவே வீணாக்கப்படுகிறது.

இன்றைய நிலையில், ஒரு சுவரொட்டி விலை உரு. 4 (சில 10 உருபா 20 உருபா அளவிலும் அடிக்கப்படுகின்றன.) பொதுவான 'ஞெகிழி' (பிளாஸ்டிக்) கொடிகள் கட்டுவதென்றாலே அதற்கு மட்டும் குறைந்தது உரு 2 இலக்கம் செலவிட வேண்டும். உள்ளூர் நாளிதழ்களில் ஒரு பக்க அளவுக்கு விளம்பரம் செய்ய 10 முதல் 20 இலக்கம் உருபா தேவை. அரை மணி நேரத்திற்கு ஓடும் ஒளியிழை (வீடியோ), திரைப்படம் உருவாக்க குறைந்தது 30 இலக்கம் உருபா தேவை. இதைப் பல படிகள் எடுத்து, ஊர்திகள் மூலம் தொகுதி முழுவதும் திரையிடக் குறைந்தது ஒரு வண்டிக்கு 5 இலக்கம் உருபா செலவாகும். கருத்துப் பரப்புதலுக்காக, இயங்கிகள், மகிழுந்துகள் இவற்றுக்கான வாடகை கன்னெய்ச் செலவுகளுக்காகக் குறைந்தது 5 இலக்கம் உருபா தேவை. முகாமையான புள்ளிகள் என்றால் உரு. 10 இலக்கம் வரை செலவாகும்.

25 அடி உயர வெட்டுருவம் (கட் அவுட்) உருவாக்க உரு 30,000 செலவாகிறது. ஒரு தொகுதிக்கு 5 வெட்டுருவப் பலகைகள் என்றால்கூட ஒன்றரை இலக்கம் தேவை. இதேபோல விளம்பரத் தட்டிகள் சுவரெழுத்து விளம்பரங்கள் செய்ய 5 இலக்கம் தேவை. இவை தவிர ஒட்டுப் படங்கள், பொட்டுகள், திறவுக் கொத்துகள், தலைக் கவிப்புகள், வெளியீடுகள், பாடல் ஒளியிழைகள் முதலானவற்றுக்கு மேலும் ஓர் ஐந்து இலக்க உருபா செலவிட வேண்டும்.

தேர்தல் வேலை செய்யும் கட்சித்தொண்டர்களுக்கு ஒருவர்க்கு, ஒருநாளைக்கு உரு 25/- கூலியாகத் தரப்படுகிறது. ஒரு வேட்பாளர்க்கு 500 பேர் ஒரு மாதக் காலத்துக்கு வேலை செய்தால் ஏறத்தாழ 4 இலக்கம் உருபா தேவை. இவை தவிர குண்டர்களுக்காக இன்னுமோர் 5 இலக்கம் செலவிட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நாடாளுமன்றத்துக்குப் போட்டியிடும் ஒரு வேட்பாளர் குறைந்த பக்கம் 50 இலக்கம் உருபா வரை செலவிட வேண்டும்.

இந்த வகையில், கடந்த 1984 தேர்தலில் இந்திராக் கட்சி நாடாளுமன்றக் தேர்தலுக்காக உண்மையில் 500 கோடி உருபா செலவிட்டது. ஆனால் அது 19 கோடி உருபாவே செலவிட்டதாகக் கணக்குக் காட்டியது.

சரி, இவ்வளவு பணமும் இவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? கட்சி ஊழியர்களிடமும், மக்களிடமும் உண்டியல் ஏந்தி, நன்கொடை திரட்டினால் அதிக பக்கம் 10 கோடி உருபாவைத் தாண்டாது.

தரகுப் பெருமுதலாளிகள், நிலக்கிழார்கள், வணிகச் சூதாடிகள் ஆகியவர்களிடமிருந்துதான் ஒப்போலைக் கட்சிகள் 90 விழுக்காடு பொருளைத் திரட்டுகின்றன. தேர்தல் வந்துவிட்டால் பெருமுதலாளிகள், தாங்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை வாரியிறைத்துத் தமக்கு வாகான சார்பான (சாதகமான), கட்சியை அல்லது

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீழ்ச்சியும் தமிழினத்தின் எழுச்சியும்!

க. கண்ணன் அறி. இ.

ஆங்கிலேய ஆட்சிக்குப் பின் இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைத்த பின்னும், தமிழகத்தில் தமிழ்த் தேசிய இன உணர்வை வளர்த்து, அதன்மூலம் தமிழர்களின் தனித் தன்மையைக் காத்துக் கொள்ள முடியவில்லை. இதற்குக் கரணியம் தமிழினத்தில் பல நூறு ஆண்டுகளாக ஊடுருவிவிட்ட தமிழரல்லாதார் அரசியல், பொருளியல் நிலைகளில் வலுவாக இருந்ததேயாகும். அரசியல் நிலைகளிலும் அரசு அதிகார வகுப்பு நிலைகளிலும் மேலாண்மை செலுத்தி வந்த தமிழகப் பார்ப்பனர்களை வீழ்த்துவதற்குப் பழைய சென்னை 'மாகாண'த்தில் இருந்த தெலுங்கு வல்லாளுமை(ஆதிக்க)ச் சாதியினரும் தமிழினத்தில் உள்ள ஆளுமைச் சாதியினர் சிலரும் 'நீதிக்கட்சி' என்றும் 'பார்ப்பனரல்லாதார் இயக்கம்' என்றும் தொடங்கினர்.

இதிலிருந்து சிறிது வேறுபட்டு ஒரு தன்மான இயக்கத்தை உருவாக்கி, தந்தை பெரியார் அவர்கள், அடித்தள மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினார். இதிலிருந்து '**திராவிடர் கழகம்**' என்று தங்கள் இயக்கத்தின் பெயரை மாற்றிக் கொண்டு, பெரியாரும் மற்ற பார்ப்பனரல்லாத தலைவர்களும் பட்டி தொட்டியெல்லாம் மிகக் கடுமையாகக்கருத்து பரப்பினர். தமிழ்நாடு, தெலுங்கு நாடு, கன்னட நாடு, மலையாள நாடு என்று தனித் தனி தேசிய இனங்களாக வளர்ந்த பின்னும் 'திராவிடர் கழகம்' என்று செயற்கையாக வைத்துக் கொண்டதால் தமிழ்த் தேசிய இன உணர்வு இங்கு இயற்கையாக வளர முடியவில்லை. ஓரளவு தமிழ்த்தேசிய இனவுணர்வை உள்ளீடாகக் கொண்டு இன்றைய குடியரசுத் தேர்தல் அரசியலில் பங்கு பெற்று அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தெலுங்கு மற்றும் தமிழ் முதலாளிகள் 'திராவிட முன்னேற்றக் கழகத்தை' அறிஞர் அண்ணாத்துரை தலைமையில் தொடங்கினர். இதிலும் தெலுங்கு பேசுகின்ற ஆளுமைச் சாதியினரே மேலாளுமை செலுத்தியதால், 'தமிழர் முன்னேற்றக் கழக'மென்றோ 'தமிழக முன்னேற்றக் கழக'மென்றோ வைக்காமல் 'திராவிட முன்னேற்றக் கழக'மென்று வைத்து, முழுமையான தமிழரல்லாத முன்னேற்றக் கழகமாகவே இதுவரை இயங்கித் தன்னுடைய வரலாற்றுக் கட்டத்தை முடித்துக் கொண்டது. இதனுடைய தோற்றம், வளர்ச்சி - இதிலிருந்து தோன்றிய 'அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' - அதனுடைய வளர்ச்சி பற்றியும், இறுதியில் தமிழினத்தின் எழுச்சி பற்றியும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய காலக் கட்டத்தில் தமிழ்த் தேசிய இன உணர்வாளர்களாகிய நாம் இருக்கின்றோம். தமிழினம் மீண்டும் ஒரு தடம்புரண்ட அரசியல் பாதையில் சென்றுவிடாமல் இருப்பதற்கு நடந்து வந்த பாதையைத் தெளிவாக அறிந்து கொள்வது தமிழின எழுச்சிக்கு அடிகோலுவதாகும்.

ஆரியப் பார்ப்பனியமும் திராவிட இயங்கங்களும்:

சாதிய ஏற்றத் தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆரியப் பார்ப்பனிய மதமாகிய 'இந்து மதம்' மக்களைத் தனித் தனிச் சேரிகளில் அடைத்து வைத்திருந்தது. தமிழக மக்களின் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளின் ஆரியர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட சமசுக்கிருதத்தின் துணைக் கொண்டு பார்ப்பனர்கள் வல்லாளுமை (ஆதிக்கம்) செலுத்தினர். உழைக்கின்ற மக்களாகிய தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து வேறுபட்ட, உடல் உழைப்பில் நேரடியாக ஈடுபடாத மேல்சாதித் தமிழர்களில் சிலரும் பார்ப்பனரோடு சேர்ந்து, கலை மற்றும் மதம் போன்றவற்றில் மேலாண்மை செலுத்தினர். இவர்கள் உடல் உழைப்பு சிறிதும் இல்லாத பார்ப்பனர்களோடு இணைந்து பார்ப்பனியப் பண்பாடுகளையும், சமசுக்கிருதத்தையும் உயர்த்திப் பிடித்தனர். மக்களின மொழியாகிய தமிழையும் மற்ற பண்பாட்டுக் கூறுகளையும் புறந் தள்ளினர். ஆயினும் மேல்சாதியினரில் சிலர் ஆரியப் பார்ப்பனியத்தோடு முழுவதும் இணைந்து செல்லாமல், தமிழ்த் தேசிய உணர்வுடையவர்களாயிருந்தனர். மேல் சாதியினரிடமே விளை நிலங்களில் பெரும்பகுதி இருந்ததால், அவர்களின் ஆளுமைக்குக் கட்டுப்பட்டே

(முன் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளரை ஏலத்தில் எடுக்கிறார்கள். தமக்கு எதிரான கட்சியை அல்லது வேட்பாளரைத் தோற்கடிக்கிறார்கள். அனைவருக்கும் ஒப்போலை உரிமை என்னும் மூடுதிரையின் பின்னே நடக்கும் இந்த ஏமாற்று (மோசடி) ஒவ்வொரு தேர்தலின் போதும் மேலும் மேலும் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது..... எல்லாப் பெரிய கட்சிகளும் பெருமுதலாளிகளிடம் கருப்புப் பண நன்கொடைகளைப் பெறத் தவறுவதில்லை.

—நன்றி. 'புதிய சனநாயகம்'
16-31 மே' 91

மற்ற உழைக்கின்ற, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்ந்தனர்.

ஆந்திர நாட்டிலிருந்து விசய நகரப் பேரரசு தமிழகத்திற்குள் காலூன்றியே பின், அங்குள்ள வல்லாண்மைச் சாதியினராகிய தெலுங்கு நாயுடு, இரெட்டியார், செட்டியார் போன்றவர்கள் படிப்படியாகத் தமிழகத்தின் விளைநிலங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். தமிழர்களில் உள்ள மேல் சாதியினர் வேளாண்மைத் தொடர்பான தொழில்களிலும் கோவில் விழாக்கள் வேடிக்கைகள் போன்றவற்றிலும், சாதிக் கட்டுப்பாடுகளை ஊர்களில் நிலைநாட்டுவதிலும், கீழ்ச்சாதித் தமிழர்களை ஒடுக்குவதிலுமே தங்கள் காலத்தைக் கழித்தனர். இதற்குப் பின்னாலிருந்து ஆரியப் பார்ப்பனர்கள் தமிழர்களின் சமயக் கொள்கைகளாகிய சைவம், மாலியம் போன்றவற்றை அழித்து அவற்றை இந்துமதமாக வளர்த்தும், அரசர்களின் துணையோடு ஏராளமான கோவில்களைக் கட்டி மக்களின் உடல் உழைப்பையும் பொருளையும் வீணடித்தனர்; சாதி வேறுபாடுகளையும் கட்டிக் காத்தனர். தமிழர்களில் செட்டியார் வகுப்பைச் சேர்ந்த சிலரே வேளாண்மை தவிர்த்த மற்ற புதிய தொழில்களில் ஈடுபட்டனர். மற்ற முதலியார், சைவ வேளாளர் போன்றவர்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்தனர். மற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்கள் அதனினும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே உழன்றனர். இந்நிலையில் தமிழகத்திற்குள் ஊடுருவிய தெலுங்கு நாயுடு, இரெட்டியார், செட்டியார் போன்றவர்களில் சிலர் புதிய தொழில்களில் முன்னேறி பொருளியல் வளம் பெற்றனர். எப்பொழுதும் பொருளியலில் முன்னேறிய வகுப்பே அரசியலிலும் விழிப்புணர்ச்சி பெற்ற வகுப்பாக இருக்கும். குமுக மதிப்பிலும் அரசியலிலும் மேல்நிலையிலுள்ள பார்ப்பனர்களுக்கும், மற்ற பார்ப்பனரல்லாதாருக்கும் உள்ள முரண்பாட்டைப் பயன்படுத்தித் தமிழ் ஆளுமை (ஆதிக்க)ச் சாதியினர் சிலரைச் சேர்த்துக் கொண்டு. தெலுங்கு ஆளுமை (ஆதிக்க)ச்சாதியினர் பல்வேறு பெயர்களில் பார்ப்பனரல்லா இயக்கங்களைத் தொடங்கினர். அடித்தள மக்களிடம் ஓரளவு சாய்கால் செல்வாக்குப்) பெற்றிருந்த 'தன்மான' இயக்கமும் 'திராவிடர் கழகமும்' குமுகச் சீர்திருத்த இயக்கங்களாகவே இருந்தன. ஆனால் தொழில் நிலையில் வட இந்திய முதலாளிகளோடு முன்னேறுவதற்கு அரசியல் அதிகாரம் தேவையாயிருந்தது. இதற்கு அனைத்து மக்களின் ஆதரவும் தேவையானதால் தெலுங்கு முதலாளிகளும் தமிழ் முதலாளிகளில் சிலரும் பேரறிஞர் அண்ணா தலைமையில் 'திராவிட முன்னேற்றக் கழகத்தை'த் தொடங்கினர்.

'கடவுள் இல்லை' — என்ற திராவிடர் கழகத்தின் நாத்திகக் கொள்கைகளை விட்டுவிட்டு, மக்களின் உளவியலுக்கேற்ப 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற புதிய கடவுள் கொள்கையை மக்களிடம் பரப்பினர்' பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் பேராசியர் அன்பழகன், கலைஞர் கருணாநிதி போன்ற இளைய தலைவர்களின் எழுத்துகளாலும் மேடைப் பேச்சுகளாலும், சிலரின் நாடக நடிப்பாலும், மொழி கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளிலும், அரசியல், பொருளியல் நிலைகளிலும் தமிழர்களும்- தமிழகமும ஆரியப்பார்ப்பனருக்கும் வடநாட்டவருக்கும் அடிமைப்பட்டிருப்பதை மக்களுக்கு உணர்த்தினர். குறிப்பாக ஓரளவு கல்வி கற்ற நடுத்தர வகுப்பினர் தி. மு. க.வினால் பெரிதும் கவரப்பட்டனர்

1957-இலிருந்து தேர்தல் அரசியலில் பங்கு கொண்டு, படிப்படியாக உயர்ந்து 1967-இல் திராவிட முன்னேற்றக்கழகம் தமிழக ஆட்சியைப் பிடித்தது, முன்பே திராவிட நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிட்டிருந்த தி. மு க. ஆட்சியைப் பிடித்தபின் வட இந்தியத் தரகு முதலாளிகளோடு உடன்பாடு கொண்டு, 1969-வரை அண்ணாவாலும், அவருக்குப்பின் கலைஞர் அவர்களாலும் தலைமையேற்கப்பட்டது. தமிழர்களுக்குள் இருந்த சாதிய மதவிய பொருளியல் ஏற்றத்தாழ்வுகளைப் படிப்படியாகப் போக்கித், தமிழின ஒர்மையை உருவாக்குவதற்குப் பகரமாகத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சாதி, மத உணர்வுகளைத் தூண்டிவிட்டுப் பொது எதிரியை அடையாளம் காட்டாமல், மக்களை மேலும் பிளவாக்கினர், சிறு சிறு சலுகைகளைப் பெறுவதற்காகவே இடஒதுக்கீட்டுக் கொள்கையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, முழுமையான அரசியல் உணர்வை மழுங்கடித்துத் திசை மாற்றிவிட்டனர். இன்று பஞ்சாப், காசுமீர், அசாம், நாகலாந்து போன்ற தேசிய இனமக்கள் போர்க்குணம் கொண்டு, வடஇந்திய ஆரியப் பார்ப்பனியத் தரகு முதலாளிய ஆட்சியை எதிர்த்துப் போரிடும்போது அந்தந்த இனத்திலுள்ள தேசிய முதலாளிகள் பின்னாலிருந்து இயங்குகின்றனர் ஆனால் தி மு. க. விடம் அத்தகைய போர்க்குணம் இல்லை. தமிழ்த் தேசிய முதலாளிகள இயக்கமாகவே தமிழின உணர்வுள்ள அறிஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளித்தனர். ஆனால் காலப்போக்கில் இஃது ஓர் உண்மையான தமிழ்த் தேசிய உணர்வில்லாத் தரகு முதலாளியக் கட்சியாகவே மாறிவிட்டது.

—(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனரான இராசீவும், தென்னாட்டுக் கன்னடப் பார்ப்பனத்தியான செயலலிதாவும் கை கோத்துக் கொண்டு, தப்பித் தவறித் தமிழர்களின் காணி-யாட்சியாக இருந்து வந்த தி.மு.க. 'அரசைத் தரை மட்டமாக்க, விடுதலைப் புலிகளின் போராட்ட முயற்சிகளைப் பூதாகாரமாக்கி, அவர்களுக்கும் தி.மு.க.விற்கும், 'மொட்டைத் தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப் போடுவது' போல முடிச்சுப் போட்டுக் காட்டி, மக்களை மயங்க வைத்து, ஆட்சியைப் பிடிக்கக் கையிணைத்துக் கொண்டு, தேர்தல் கும்மாளம் போட்டனர்.

இந் நிலையில் தான், செயலலிதாவின் அ.தி.மு.க.விற்குப்'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போலவும் 'பருத்தி புடவையாகக் காய்த்தது' போலவும், இராசீவ் கொலையுண்ட நிகழ்ச்சி நடந்தது. 'தொம்பனுக்குக் குழந்தை செத்தும் துண்-டேந்தப் பயன்பட்டது' போல, இராசீவின் மறைவு, அ.தி.மு.க., இந்திரா பேராயக் கட்சிகள் இரண்டிற்கும் ஒப்பாலை பொறுக்கிக் கொள்ள வசதியாகப் பயன்பட்டது. தேர்தலில் செயலலிதாவின் கனவு, நனவும் ஆகி விடவே, 'அடித்த மேளத்தையே ஆட்டக்காரன திரும்பத் திரும்ப அடித்துக் காட்டு-வது போல'வும், 'அண்ணன் செத்ததைச் சாக்கு வைத்து, அண்ணியை அகமுடையாள் ஆக்கிக் கொண்டது' போலவும், விடுதலைப் புலிகளை மேலும் மேலும் விரட்டித் தமிழகத்தில் பார்ப்பனியத்திற்கு ஓர் எதிரான சூழ்நிலை வராமல் காத்துக் கொள்ள-வும், தமிழினம் என்றுமே தன்மானம் பெற்றுத் தன்னுரிமை பெற்று விடாமல் பார்த்துக் கொள்ள-வும், ஆட்சியிலிருந்து கீழே விழுந்து விட்ட தி.மு.க.வை ஆழக் குழி தோண்டி புதைத்து விட-வும் உறுதி பூண்டு, ஒரே கல்லில் மூன்று காய்களை அடிக்கும் சாணக்கிய உத்தியுடன் செயல் பட்டு வருகிறார். இதற்கு வட விந்தியப் பார்ப்பன, முத-லாளிய அரசும். 'அடித்தாலும் பிடித்தாலும் ஆத்தாளும் பிள்ளையுமாகவே போகட்டும்' என்பது போல, தமிழின வீழ்ச்சி தமிழகத்திற்குள்ளாகவே நடக்கட்டும் என்று ஊக்கமும், உடன் துணையும் தந்து வருகின்றனர்.

இவ் வகையில் விடுதலைப் போராளிகளை (புலி-களை)க் கடத்தல்காரர்கள் என்றும், கொள்ளையர்கள் என்றும், கொலைகாரர்கள் என்றும், வெறிமயக்க (போதை)ப் பொருள்களை விற்பவர்கள் என்றும் மக்கள் அவர்களைக் கீழ்த்தரமாகக் கருதும்படி, கொச்சைப் படுத்தியும், இழிவு படுத்தியும் கருத்து-களைப் பரப்பியும் அவற்றை உறுதிப் படுத்தும் காட்சிகளைச் சுவடித்தும் வருகின்றனர்.

தமிழகமெங்கும் தடவோ தடவென்று தடவிப், புலிகளொடு தொடர்புள்ளவர்கள் என்று நாற்பது ஐம்பது பேர்களை மறைமுகமாகவும், பதினாறு பதினேழு பேர்களை வெளிப் படையாகவும் தளைப் படுத்தி, உசாவல் (விசாரணை) என்ற பெயரிரு உருட்டல்களையும் மிரட்டல்களையும் செய்து வல் கின்றனர்.

கடந்த சூலையில் யாழ்ப்பாணத்தில் ஆனை-யிறவுப் பகுதியில் நடந்த புலிகளின் முற்றுகை, இவர்களுக்கு அவர்களைக் குறைத்து மதிப்பிடச் செய்வதற்கு ஒரு காரணியாகப் பயன்பட்டு வரு கிறது. அடடா! நாள் தோறும், அவர்களைப் பற்றி '100 பேர் கொல்லப் பட்டனர்', '120பேர் அழிக்கப் பட்டனர்', '150 பேர் இறந்தனர்' என்று எத் துணைக் குரல் அழுத்தத்துடனும், கொள்ளை மகிழ்ச்சியுடனும், சிங்களப்படைஞர் தரும் பொய்ச் செய்திகளை வானொலி வழியாகவும் வானொளியிலும் அறிவித்துப் பூரித்துப் போகின்றனர்! சூலை முடிய ஏறத்தாழ 2500 புலிகள் இறந்து போனதாகவும், ஏராளமான பேர்கள் காயம் பட்டுள்ளதாகவும் பொய்க் கணக்குக் கூறி மகிழ்கின்றனர். இவர்கள் தரும் கணக்குப்படி புலிகள் சாவதென்றால், இன்று விடுதலைப் புலிகளே முற்றும் இல்லாமல் கொல்லப் பட்டிருக்க வேண்டுமே! இந்த நிலையில் சிங்களப் படையினர் மட்டும் சூலை இறுதிவரை 170 பேர்-களே இறந்ததாகவும், 600 பேர்களே காயம் அடைந்ததாகவும் கணக்குத் தருகின்றனர். அதை இங்கும் செய்தியாகக் கூறி, மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். உண்மையில ஆனையிறவுத் தாக்குத லில் இது வரை 200 விடுதலைப் புலிகள்தாம் இறந்-துள்ளனர் என்று புலிகள் சார்பில் செய்தி வருகிறது!

இன்னொன்றையும் நாம் உணர்ந்து கொள்ளு-தல் வேண்டும். இலங்கைத் தமிழர் போராட்டத் திற்குப்பின் அங்கிருந்து வந்த ஏதிலி(அகதி)களுக் கும், ஏதோ பெரிய தொடர்பு இருப்பது போல் கருதிக் கொண்டு, எதிலுமே பங்கு கொள்ளாத இலங்கைத் தமிழ்ப் பொது மக்களை, எத்துணைக் கொடுமைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் ஆளாக்கி வருகின்றனர்! இவ்வகையில் இது வரை அறுபதாயி ரம் பேர்களுக்கும் மேலும் காவலர்கள் உசாவல் என்றும், பதிவு என்றும் கூறித் தொல்லைப் படுத்தியிருக்கின்றனர்.

பெங்களூர், கோவை, திருச்சி, தஞ்சை, மதுரை என்று பல பெரு நகரங்களில் உள்ளவர்களை யெல் லாம் அச்சுறுத்திச் சிறைப்படுத்தி உசாவி வருகின் றனர். கள்ளக் கடத்தல், கருவிக் கடத்தல் என்றும் கூறிக் கடற்படைப் பிரிவுகளை யெல்லாம் விரிவு படுத்தியிருக்கின்றனர். ஐயமான படகுகளைக் கண்டவுடன் சுடவும் கட்டளையிட்டுள்ளனர். பிடித்து உசாவும் போதே சுடவும் கொலை செய்யவும் துணிந்த காவல் துறைக்குச் சுடுங்கள் என்று

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி அடுத்த இதழில்)

ஆணை தந்தால் என்ன நடக்கும் என்றே கூறத் தேவையில்லை.

நடுவணரசுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் புலிகளை ஒடுக்கவும் நாடு கடத்தவும் தமிழக முதலமைச்சர் செயலலிதாவிற்கு அவர் வீட்டிற்குப் போய்க்(2-8-91) கலந்து பேசி, அவர் வேண்டுகோளின்படி அதிவேகப் படகுகளையும், திருகு விசிறி ஊர்திகளையும் வழங்கவும், தேவை-யானால் மேலும் கூடுதலான நடுவண் காவல் படைகளை அனுப்பி வைக்கவும் உறுதியளிக்கிறார் என்றால் விடுதலைப் புலிகளை ஒடுக்க தமிழக அரசும் நடுவணரசும் எத்துணை உறுதியுடன் செயல்பட இருக்கின்றன என்பதை அறிய முடிகிறது. 'பேயரசு ஆண்டால் பிணம் தின்னும் கழுகு' என் பார்கள். அதிலும் 'பெண் பேயரசு ஆண்டால் பிணம் தின்னும் காக்கைக் குருவி யெல்லாம்'— என்று ஒரு புதிய சொலவடையைப் படைத்த பெருமையைச் செயலலிதாவுக்குக் கொடுக்கலாம்.

விடுதலைப் புலிகளை ஒடுக்குவது, அவர்களை அழிப்பது, தமிழர்கள் உரிமை பெறுவதைத் தடுப்பதே ஆகும். இராசீவின் கொலைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கும் இதற்கும் கொஞ்சமும் தொடர்பில்லை. இராசீவின் பெயரால், பார்ப்பனியமும் நடுவணரசும் தமிழினப் பகைவர்களும் தமிழீழ விடுதலைப் போராளிகளையும், தமிழின விடுதலை-யுணர்வையும் அழித்தொழிக்க முனைந்து நிற்கின்றனர்.

ஆக, உயிரோடு இருந்த பொழுது இராசீவ் தமிழினத்தை அழிக்க முனைந்தார்; அழித்தார்! அவர் செத்த பின்னரும் அவர் பெயரால் அழிபடு-கிறது தமிழினம்! எனவே தமிழினத்தைச் செத்தும் அழிக்கிறார், இராசீவ்!

கொலையாளிகளை இனி யாரும் கண்டு பிடிக்கத் தேவையில்லை. கொலையாளி என்றோ இறந்து பட்டாள். ஆனால் அவள் பின்னணியில் உள்ளவர் யார் யார் என்பதைக் கண்டு பிடிக்கும் ஒரு சாக்கில் ஓர் இயக்கத்தையே—இனத்தையே அழிப்பது, ஆட்சியதிகார மமதையின் செயற்பாடாகும்! காவல் துறையும் படைத்துறையும் கையில் பிடித்துத் தம் விருப்பம் போல் ஆட்டியும் ஏவியும் விளையாடிய உன்மத்தர், அதிகார வெறியர் இராசீவ்தாம், எவ-ராலும் காக்க வியலாமல் வெடிப்புண்டு சிதறிப் போனார்! அரசு வன்முறைக்கு எதிராகச் செயல் படுவதற்கு ஒரு ஞாயம் உண்டு! ஆனால் அதுவே வன்முறையைக் கையிலெடுத்துக் கொள்ளக் கூடாது. வரலாறு இத்தகைய அரசுக்குரிய முடிவு-களை வேறாகவே வழங்கியிருக்கிறது! அதையே நாம் இப்பொழுதைய அரசுக்கும் கூறிக் கொள்கிறோம்! மக்களுக்கும் உணர்த்திக் கொள்கிறோம்!

விடுதலையுணர்வு வளர்க!
விடுதலைப்போராட்டம் வெல்க!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
இஃது ஒரு புதிய வெளியீடு.

பதிவுக்கொடுப்பு அஞ்சல் செலவு: 3-00.
தென்மொழி, சென்னை-5

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலையேற்ற அறிவிப்பு!

அச்சீட்டுத் தாள்களும் மை முதலிய அச்சுப் பொருள்களும் கடுமையாக விலையேறியுள்ளதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய நம் இதழ்களின் விலைகளையும் உயர்த்த வேண்டுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

எனவே, இம் மாதம் முதல் நம் இதழ்களின் விலைகள், உறுப்பினர் கட்டணங்கள் கீழ்வருமாறு உயர்த்தப் பெறுகின்றன.

	தனியிதழ்	ஆண்டுக் கட்டணம்.	அரை ஆண்டு	வாணாள் கட்டணம்.
தென்மொழி	3-00	36-00	18-00	500-00
தமிழ்ச்சிட்டு	1-50	18-00	10-00	250-00
தமிழ்நிலம்	1-50	36 00	18-00	500-00.

சிந்தனைக்கு-64

விடுதலை பெற்ற ஓர் இனம், இன்னோர் இனத்தின் விடுதலையுணர்வை வரவேற்க வில்லையெனில், அது தான் பெற்ற விடுதலை உரிமையைக் காலப் போக்கில் இழந்துவிட வேண்டியிருக்கும்.

நூல் - அஞ்சல்

பெறுநர்

Scanned with CamScanner